JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 24.06.2022

**MC.No.17/2016** **Name:Elango S/o.Karuppaya RW1**

<u>எ.ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ. மூன்று வருடம் படித்துள்ளேன். ஆனால் பட்டம் பெறவில்லை. அதற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால் ஆங்கில அறிவு இல்லை என்பதுதான் காரணமாகும். நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் அரசு வேலையில் இருந்து பணி ஓய்வு வெற்று பென்சன் வாங்கி வருகிறேன். என்ன அரசு பணியில் இருந்தேன் என்றால் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக இருந்தேன். நான் 2018ம் வருடம் ஜனவரி மாதத்தில் பணி ஓய்வு பெற்றேன். எனக்கு திருமணம் ஆகி 32 வருடம் ஆகிறது. எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனது திருமணம் நிச்சயக்கப்பட்ட திருமணம் ஆகும். மனுதாரர் எனக்கு ஏற்கனவே உறவினரா என்றால் இல்லை. நான், மனுதாரரும் ஒரே சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். 2ம் மனுதாரர் கோயமுத்தூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெயர் மட்டும் குறிப்பிட்டுள்ளேன். 2ம் மனுதாரர் நான் சொன்னவாறு வேலை எதுவும் பார்க்கவில்லை என்றும் அவ்வாறு பார்த்திருந்தால் அது சம்பந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் மனுதாரரான எனது மகளை நான் தான் செலவு செய்து படிக்க வைத்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். (மேற்கொண்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய

ஆவணங்கள் தேவையென மனுதாரர் தரப்பின் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மனு ஒத்திவைக்கப்படுகிறது)

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.